செ.வெ.எண்: 254 நாள்: 26.03.2020

**கொரோனா நோயில் இருந்து காக்கும் ஒரே மருந்து தனிமைப்படுத்திக்கொள்ளுதல் மட்டுமே.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (26.3.2020) தலைமைச் செயலகத்தில் இருந்து அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடன் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து காணொலிக்காட்சி மூலமாக ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்விற்கு பின் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழகஅரசு கொரோனா தொற்றை தடுக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் இன்றையதினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் நடைபெற்ற காணொலிக்காட்சி ஆய்வு கூட்டத்தின் போது புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்து, பல்வேறு அறிவுரைகள் வழங்கி உள்ளார்கள்.

குறிப்பாக பொதுமக்களின் நலனுக்காக அமல்படுத்தப்பட்டுள்ள 144 தடை உத்தரவை முறையாக பின்பற்றிடவும், மாவட்டம் முழுவதும் வீதிவீதியாக தினந்தோறும் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தி உள்ளார்கள்.

மேலும் வெளிநாட்டில் இருந்து வருகைபுரிந்தவர்களின் விபரங்களை விடுபடாமல் முழுமையாக கண்டறிந்து அவர்கள் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து கண்காணித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. சிகிச்சைக்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் இருப்பதை உறுதி செய்து கொள்ள உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் அரசால் அறிவிக்கப்படும் அனைத்து உத்தரவுகளையும் தவறாது அனைவரும் கடைபிடிக்க வேண்டும். குறிப்பாக மிக கொடிய கொரோனா நோயில் இருந்து காக்கும் ஒரே மருந்து தனிமைப்படுத்திக்கொள்வது மட்டும்தான் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பி.வி.அருண்சக்திகுமார், இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.காளிதாசன், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் அழ.மீனாட்சிசுந்தரம், ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.சந்திரசேகரன், சுகாதாரத்துறை துணை இயக்குநர்கள் மரு.அர்ஜுன்குமார், மரு.கலைவாணி, நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**